**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**வா.சா. – 1 – சுரேஷ்**

**நாள். 20.07.2023**

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் பாட்டனார் ஆறுமுக கவுண்டர் இறக்கும் வரை 2 மற்றும் 3 பிரதிவாதிகளுடன் ஒன்றாக வசித்து வந்தார் என்றால் சரியல்ல. நானும், என் தகப்பனாரும் ஒசூரில் இருந்தோம். 1ம் பிரதிவாதி முத்துச்சாமி தஞ்சாவூரில் இருந்தார். என் அப்பாவும், நானும், 1ம் பிரதிவாதியும் ஆறுமுககவுண்டரை எந்த காலத்திலும் பராமரித்தது இல்லை என்றால் சரியல்ல. எங்கள் தோட்டத்து வீட்டில் தான் அவர் இருந்தார். அவரை ஊரில் இருந்து வந்து பார்த்து போய்கொண்டிருந்தோம். 2ம் பிரதிவாதியின் கணவர் தங்கவேலு, 3ம் பிரதிவாதி பிறந்து சிறிது காலத்தில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பிறந்து 12 வருடங்கள் கழித்து தங்கவேலு இறந்தார். என் பாட்டனார் ஆறுமுக கவுண்டர் தோப்புபட்டியில் இருந்து வந்த தோட்டத்து வீடு அவருக்கு பாகத்தில் கிடைத்த சொத்து என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியின் கலையரசியின் அம்மா மீனாட்சியம்மாளின் சொத்து தான் அந்த வீடு என்றால் அதை என் தந்தையின் திருமணத்திற்கு முன்பாகவே மீனாட்சியம்மாள் என் தந்தைக்கு அந்த வீட்டை எழுதிக்கொடுத்துவிட்டார். அந்த வீட்டில் என் பாட்டனார் ஆறுமுக கவுண்டர் மற்றும் மீனாட்சியம்மாள் வசித்து வந்தார்கள். அந்த சொத்து தற்போது எங்களிடம் தான் உள்ளது. அந்த சொத்தின் சர்வே எண்.40, 41, தோப்புபட்டி கிராமம், வி.புதுக்கோட்டை பஞ்சாயத்து. மேற்படி சொத்து என் பாட்டனார் ஆறுமுக கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. ஆனால் அந்த சொத்தில் என் பாட்டனார் ஆறுமுக கவுண்டர் அவரது இரண்டாவது மனைவி மீனாட்சியம்மாளுடன் குடி இருந்தார். சர்வே எண்.40, 41 சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஒரு சர்வே எண் 7 ஏக்கர் 11 செண்ட் மற்றொரு சர்வே எண்.5 ஏக்கர் 86 செண்ட். மேற்படி சொத்தானது 1976ம் ஆண்டு பாகப்பிரிவினை மூலம் என் தந்தையாருக்கு கிடைக்கவில்லை. மேற்படி சொத்துக்கள் என் தந்தையாருக்கு பாத்தியம் என்று நிருபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. 27.04.2011ம் தேதி மீனாட்சியம்மாள் காலமாகிவிட்டார். அதன்பின்னர் 2,3 பிரதிவாதிகள் என் பாட்டனாருடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. என் பாட்டி மீனாட்சியம்மாள் இறந்த பிறகு, என் பாட்டனார் ஆறுமுக கவுண்டர் தனியாக தான் இருந்தார். என் பாட்டனார் ஆறுமுக கவுண்டரை பராமரிப்பதற்காக நாங்கள் ஆள் போட்டோம் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் வழக்குரையில் 8வது பாராவில் வழக்கு சொத்தை பொறுத்து 3ம் பிரதிவாதி பொய்யாக உற்பத்தி செய்துள்ள உயிலை காட்டி சட்டத்திற்கு புறம்பாக

பட்டா பெற்றுள்ளார் என்று சொல்லியுள்ளேன். எதை வைத்து அவ்வாறு உயில் உற்பத்தி செய்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் யாருக்கும் உயில் எழுதி வைக்க வேண்டிய நிலைமை என் பாட்டானாருக்கு இல்லை. என் பாட்டனார் ஆறுமுக கவுண்டரின் மூத்த தாரத்து மகள்கள் பெரியம்மாள், முத்தம்மாள் (3,4 வாதிகள்) தான் அவருடன் இருந்து, அவரை பார்த்து கொண்டிருந்தார்கள். அவர் எல்லோரிடமும் பாசத்தோடு தான் இருந்தார். அதனால் உயில் உற்பத்தி செய்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன். என் வழக்குரையில் 3,4 வாதிகள் என் பாட்டனார் ஆறுமுக கவுண்டரை பராமரித்தனர் என்ற விபரம் பற்றி சொல்லவில்லை என்றால் அவர்கள் பராமரிக்கவில்லை, பார்த்து போய் கொண்டிருந்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.07.20 17:33:25 +0530

Additional District Judge,

Dindigul.